


**27.05.2024**

## 22. நாளுக்கு நாள் மதுரமாகும் திருமண ஜீவியம்!

திருமண ருசி நாளுக்கு நாள் கூடும் அந்த "மகிமையான வாழ்விற்கு" 'முன் இடத்தை நாடாமல்' அந்த கலியாணத்தில் 'வேலைக்காரர்களோடு' சேர்ந்துகொண்ட இயேசுவின் தாழ்மை ஆவியே நம் யாவருக்கும் வேண்டும்! அவர்கள் மாத்திரமே, மதுரமான குடும்ப வாழ்விற்கு "அவர்களுக்கு அவர் என்ன சொல்லுகிறாரோ" அதின்படி செய்வார்கள்! (யோவான்2:5).

ஆகவே, அன்றாட நம் குடும்ப ஜீவியத்தில் ஏற்படும் சோதனை மற்றும் போராட்டங்களில் கொப்பளித்து வரும் அந்த ருசியற்ற 'சொந்த ஜீவனை' வெளியே உள்ள ஜாடிகளில் ஊற்றி, ஊற்றி, புறக்கணிக்க..... 'உள்ளான' மதுர தெய்வ நற்குணம் நமது குடும்ப ஜீவியத்தில் கூடிக் கொண்டே போகும்!

– ரத்னம்